

ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி அலங்காரத்தட்டில் சி.பசுபதிபாண்டியனின் 14ம் ஆண்டு நினைவு நாளையொட்டி அவரது நினைவிடத்தில் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர்கள் கடம்பூர் ராஜூ எம்எல்ஏ, கே.டி.ராஜேந்திர பாலாஜி, எஸ்.பி.சண்முகநாதன், சி.த.செல்லப்பாண்டியன், வி.எம்.ராஜலட்சுமி மற்றும் கிருஷ்ணமுரளி குட்டியப்பா எம்எல்ஏ, என்.சின்னத்துரை, பி.மோகன், மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் எம்.ஆர்.வி.கவியரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் மலர்தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் மத்திய ஒன்றியம் வீராணத்தில் திராவிட பொங்கல் விளையாட்டு போட்டி கிரிக்கெட் ,கைப்பந்து, ஓட்டப்பந்தயம் போட்டியினை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் வீராணம் சேக் முகம்மது, கிளை செயலாளர் பாலசுப்ரமணியன், கே ஆர் டி முருகன் மாவட்ட ஓட்டுனர் அணி அமைப்பாளர் அமானுல்லா, கவுன்சிலர் பழனி என்ற பால்துரை கலந்து கொண்டனர்.

# கோவில்பட்டி திமுக சார்பில் பொங்கல் விழா: மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் பரிசு வழங்கினார்



**கோவில்பட்டி ஜன 12**

கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி , கோவில்பட்டி ஒருங்கிணைந்த ஒன்றியங்கள் சார்பாக லாயல் மில் காலணியில் நடைபெற்ற திராவிட பொங்கல் விளையாட்டு விழாவில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர், தமிழக சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் மாண்புமிகு பெ.கீதா ஜீவன் அவர்களின் ஆலோசனையின் படி கோவில்பட்டி மத்திய ஒன்றிய கழக செயலாளர் பிக்கிலிபட்டி முருகேசன், கோவில்பட்டி மேற்கு ஒன்றியக் கழக செயலாளர் ராதா கிருஷ்ணன், கோவில்பட்டி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜெய கண்ணன் ஆகியோர்களின் தலைமையில், பொதுக்குழு உறுப்பினர் இ.பி.ரமேஷ், முன்னிலையில், மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பெண்களுக்கான ஓட்டப்பந்தயம், ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி அணிகளுக்கிடையே நடைபெற்ற இறுதி போட்டியினை தொடங்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு தொகை மற்றும் கோப்பைகளை வழங்கினார்,

இதில் ஆண்கள் பிரிவில் முதல் பரிசினை மின்னல் ஸ்போர்ட்ஸ் கிளப் மூப்பம்பட்டி அணியும், இரண்டாவது பரிசினை ஏஎம்சி ஸ்போர்ட்ஸ் கிளப் இளிப்பையூரணி அணியும் ,பெண்கள் பிரிவில் ஸ்டெபி அகாடமி ஸ்போர்ட்ஸ் கிளப் முத்துநகர் அணியினரும், இரண்டாவது பரிசினை மின்னல் ஸ்போர்ட்ஸ் கிளப் கோவில்பட்டி அணியினரும் தட்டி சென்றனர் , இந்நிகழ்வில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கண்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாரதி, உத்திரகுமார், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சந்தானம், வழக்கறிஞர் ராமச்சந்திரன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மாத்தையா, மாவட்ட மகளிர் அணியினர் தங்க மாரியம்மாள், செல்லத்தாய், கலா, உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை சிறப்பித்தனர்.

# கடையநல்லூர் மசூதுதைக்கால் மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி

## நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் தலைமையில் நடந்தது



**தென்காசி ஜன.12**

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சிக்கு உட்பட்ட அரசு உதவி பெறும் மசூதுதைக்கால் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் கலந்து கொண்டு 11 ஆம் பகுப்பு பயிலும் மாணவ மற்றும் மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டியினை வழங்கினார் உடன் பள்ளியின் தாளாளர் பட்டத்து சாஹிப் ஹாபிழ் மௌலவி

உ மு செ ஹசன் மக்தூம் ஆலிம் சாஹிப், பள்ளியின் தலைமை ஆசிரியர் சிக்கந்தர் ரஹிமான், உதவி தலைமை ஆசிரியர்கள் முகமது மசூது, ஹபீபுல்லாஹ், ஆசிரியர்கள் ஆகியோர் முன்னிலையில் நகர் மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் 11 ஆம் பயிலும் 69 மாணவர்கள் மற்றும் 87 மாணவிகளுக்கு என மொத்தம் 156 இலவச மிதிவண்டியினை வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியில் 17வது வார்டு நகர மன்ற உறுப்பினர் நிலோபர் அப்பாஸ், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் சுகுமார், முருகானந்தம் மற்றும் மாணவச் செல்வங்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்



தென்காசிமாவட்டம்வாசுதேவநல்லூர்சட்டமன்றதொகுதியில் நாளை நடைபெற உள்ள 1008 பொங்கல் பானைகளுடன் நடைபெற உள்ள நம்ம ஊரு மோடி பொங்கல் நிகழ்ச்சிக்கு பாஜக தேசிய செயல் தலைவர் நிதின் நபினுக்கு பாஜக தென்காசி மாவட்ட தலைவர் ஆனந்தன்அய்யாசாமி அழைப்பிதழ் வழங்கினார்.



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத்தில் நாளை1008 பானைகளில் வெற்றிகள் பொங்க மக்கள் திருநாளாக கொண்டாடப்படும் நிகழ்விற்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு பாஜக தென்காசி மாவட்டத் தலைவர் ஆனந்தன்அய்யாசாமி அழைப்பிதழ் வழங்கினார்.

# பள்ளி மாணவர்களுக்காக நடைபெற்ற வேளாண் கண்காட்சி- கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி மாணவர்களின் சிறப்பு முயற்சி



**தென்காசி ஜன.12**

உன்னங்குளத்தில் அமைந்துள்ள வெஸ்லி பள்ளியில், கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் பள்ளி மாணவர்களுக்காக வேளாண் கண்காட்சி ஒன்றை நடத்தினர்.

இந்த கண்காட்சியில் வேளாண்மை தொடர்பான பல்வேறு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அதில் நெல் வகைகள், பூச்சிக்கொல்லிகள், இயற்கை உரங்கள், தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு தொடர்பான பொருட்கள், மேலும் பயிர்களில் நோய் தாக்கத்திற்கான அறிகுறிகள் உள்ளிட்டவை இடம் பெற்றிருந்தன. பள்ளி மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு காட்சிப் பொருட்களை பார்வையிட்டு விளக்கங்களை கேட்டறிந்தனர். இதன் மூலம் பள்ளி மாணவர்களுக்கு வேளாண்மை குறித்த அடிப்படை அறிவை வழங்கும் பயனுள்ள நிகழ்ச்சியாக இது அமைந்தது.

தென்காசி மாவட்டத்தில்

# குறள் விழா போட்டிகள்: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

**தென்காசி ஜன.12:**



தமிழ்நாடு முதலமைச்சர் 31.12.2024 - ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியில் ஒவ்வோர் ஆண்டும் குறள்வாரம் கொண்டாடப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அவ்வறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு 2026 ஆம் ஆண்டில் சனவரி திங்களில் குறள்வார விழாவினை நடத்திட அறிவுறுத்தியதன் அடிப்படையில் தென்காசி மாவட்டத்தில் காலை 10.00 மணி அளவில் தென்காசி இ.சி.ஈ. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கலையரங்கில் பொது மக்கள் மட்டும் பங்குபெறும் வகையில் குறள் ஓவியப் போட்டி மற்றும் குறள் ஒப்புவித்தல் போட்டி நடைபெற உள்ளது. போட்டியின் விபரம் - காலை 10.00 மணி முதல் காலை 11.00 மணி வரை நடைபெறவுள்ள ஓவியப் போட்டியில் ஏ4 தாள் அளவில் வரையப்படும் ஓவியமாக இருக்க வேண்டும். இந்த போட்டிக்கான முதல் பரிசு ரூ.5000/-மும், இரண்டாவது பரிசு ரூ.3000/-மும், மூன்றாவது பரிசு ரூ.2000/-மும், பரிசுத்தொகை மற்றும் பராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்ந்து காலை11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ள குறள் ஒப்புவித்தல் போட்டியில் அதிக எண்ணிக்கையிலான குறளை ஒப்பித்தோர் தரவரிசை அடிப்படையில் முதல் 5 பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.5000/- மும் , அடுத்த 5 பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.3000/- மும், அடுத்த 5 பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.2000/- மும் பரிசுத் தொகை மற்றும் பராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும். மேலும், ஓரே தரவரிசையில் 5-க்கும் மேற்பட்டோர் இடம் பெறும் நேர்வில் திருக்குறள் சார்ந்த வினாக்கள் கேட்டு பதிலளிக்கும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

போட்டிகளில் பங்கேற்கும் முறை: போட்டியில் கலந்து கொள்ளும் பொதுமக்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள துலங்கல் குறியீடு (QR Code) வழியாக பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்யாதவர்கள் போட்டி நடைபெறும் நாளன்று (19.01.2026) (திங்கள்கிழமை) தேர்வு மையத்திற்கு நேரடியாக வந்து பதிவு செய்துபோட்டிகளில் பங்கேற்கலாம். மேலும் விபரங்களுக்கு 9600212764, 9025654265, 9578358343, 9750113391என்ற அலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

சங்கரன்கோவில் வடக்கு மாவட்ட திமுக சார்பில்

# சமத்துவ பொங்கல் விழா- 101 பானைகளில் பொங்கல் வைத்து கொண்டாட்டம்: ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



சங்கரன்கோவில். ஜன.12.

தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சமத்துவ பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட அவை தலைவர் சுப்பையா தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் அமைச்சர் தங்கவேலு, யூஎஸ்டி சீனிவாசன், பரமகுரு, மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம், கூட்டணி கட்சி மாவட்ட செயலாளர்கள் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செய்யதுபட்டாணி, திராவிட தமிழர் கட்சி மகாலிங்கம், ஆதித்தமிழர் பேரவை மதன், ஆதித்தமிழர் கட்சி பொதிகை ஆதவன் முன்னிலை வகித்தனர்.

இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு 101 பொங்கல் பானைகளில் சமத்துவ பொங்கல் வைக்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். தொடர்ந்து கட்சி நிர்வாகிகளுக்கு பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார். அதனை தொடர்ந்து தமிழர் பண்பாட்டை உணர்த்தும் வகையில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திமுக மாவட்ட துணைச் செயலாளர்கள் ராஜதுரை, புனிதா, மனோகரன் ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கர பாண்டியன், கடற்கரை, பொன் முத்தையா பாண்டியன், பெரியதுரை, வெள்ளத்துரை, ராமச்சந்திரன், சேர்மத்துரை, கிறிஸ்டோபர், பால்ராஜ், அன்பரசு, குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் மாரிச்சாமி, தேவா என்ற தேவதாஸ், வேல்சாமி பாண்டியன், மகேஸ்வரி , பராசக்தி, சாகுல் ஹமீது, நகர செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி கிழக்கு அந்தோணிசாமி, மேற்கு நாகூர் கனி, அந்தோணிசாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் ரூபிபாலசுப்பிரமணியன், குருசாமி, மாரிமுத்து, சேது சுப்பிரமணியன், நகராட்சி சேர்மன்கள் சங்கரன்கோவில் கௌசல்யா வெங்கடேஷ், புளியங்குடி விஜயா சவுந்திர பாண்டியன், சார்பு அணி தலைவர்கள் வக்கீல் அணி முத்துராமலிங்கம், மருத்துவர் அணி சுமதி, பொறியாளர் அணி சங்கர், விவசாய அணி சேர்மன் பாலசுப்பிரமணியன், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி முருகேசன், சார்பு அணி அமைப்பாளர்கள் வக்கீல் அணி பிச்சையா, மாணவர் அணி உதயகுமார், பொறியாளர் அணி பசுபதி பாண்டியன், நெசவாளர் அணி சந்திரன், விளையாட்டு மேம்பாட்டு அணி காசிராஜன், தொண்டரணி அப்பாஸ், இலக்கிய அணி குருவசந்த், ஐ டி விங்க் கிப்ட்சன், மின்வாரிய தொமுச திட்ட செயலாளர் மகாராஜன், சார்பு அணி துணை அமைப்பாளர்கள் சுற்றுசூழல் அணி ஜலால்,இளைஞர் அணி ராஜராஜன், கார்த்தி, அன்சாரி, ராஜ், மாணவர் அணி வீரமணி, விவசாய தொழிலாளர் அணி சரவணன், ஐ டி விங்க் சிவசங்கரநாராயணன், ரஜினிகாந்த், வக்கீல்கள் சண்முகையா, கண்ணன், அன்புச்செல்வன், அருணாச்சலம், பிரபாகரன்,காளிராஜ், வார்டு செயலாளர்கள் வாழைக்காய் துரைப்பாண்டியன்,பாட்டத்தூர் ராமலிங்கம், வெள்ளத்துரை, மகளிர் அணி அண்ணாமலை, சீதாலட்சுமி, விடுதலை சிறுத்தைகள் கட்சி தொகுதி செயலாளர் பீர் மைதீன், ஶ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பழனிச்செல்வம், மற்றும் இளைஞரணி வீரா, ஜான்சன், மாணவரணி வெங்கடேஷ், சிறுபான்மையினர் அணி ஜிந்தாமைதீன், முன்னாள் வர்த்தக அணி பத்மநாபன், சூரிய நாராயண மூர்த்தி, ஜெயக்குமார், பாலாஜி, பாரதிராஜா, மாரியப்பன், கார்த்தி, சரவணன், சத்யராஜ், பீர் ,இஸ்மாயில், மாதேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செங்கோட்டையில்

# ஆட்சேபனையற்ற புறம்போக்கு இடத்தில் குடியிருப்போருக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க நகர திமுக சார்பில் ஏற்பாடு

## குடியிருப்போர் பாராட்டு



செங்கோட்டை . ஜன,12,

செங்கோட்டை நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் பொங்கல் பரிசு வழங்கும் துவக்க விழா நடந்தது. நிகழ்வில், கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பா.குணசேகரன் செங்கோட்டை நகர கழக செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன் மற்றும் மாவட்ட கழக நகர கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்த நிலையில், செங்கோட்டை வல்லம் ரோட்டில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு பகுதிகளில் பல ஆண்டுகாலமாக வீடு கட்டி குடியிருந்து வரும் 9 வீடுகளைச் சார்ந்தோர் நகரச்செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன் மற்றும் கடையநல்லூர் சட்டமன்ற சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பா.குணசேகரன் ஆகியோரை நேரில் சந்தித்து தங்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கக் கேட்டு வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்திருந்ததாகவும் இதுநாள் வரை இலவச வீட்டுமனை பட்டா தங்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதாகவும் முறையிட்டதன் பேரில் சம்பந்தபட்ட இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்து குடியிருப்போர்களை சந்தித்தனர். மேலும் புறம்போக்கு இடத்தில் வாழ்ந்து வருவோருக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கிட 2025-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை பட்டா வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் முக.ஸ்டாலின் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருந்தார்கள் மேலும் பொதுமக்களுடைய நலன் கருதி மேற்படி ஆட்சேபனையற்ற பகுதிகளில் வீடு கட்டி குடியிருந்து வரும் பொது மக்களுக்கு பட்டா வழங்கிடும் வகைக்கு மேலும் ஒரு மாத காலத்திற்கு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி வரைக்கும் அரசாணை 97-ன் பிரகாரம் கால நீட்டிப்பு செய்துள்ளதன் அடிப்படையில், செங்கோட்டை கீழூர் கிராமத்தில் வல்லம் ரோடு பகுதியில் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக ஒன்பது குடும்பங்கள் தொடர்ந்து குடியிருந்து வருவோர்களுக்கு பட்டா வழங்கிட வேண்டி ஆவன செய்திடுமாறு செங்கோட்டை வருவாய் வட்டாட்சியர் வெங்கடசேகர் அவர்களிடத்தில், மேற்படி மனு கொடுத்திருந்தவர்களுக்கு பட்டா வழங்க ஆவன செய்யக் கோரி, கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும் ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலருமான பா.குணசேகரன், செங்கோட்டை நகர தி.மு.கழக செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் நேரில் சென்று வலியுறுத்திய நிலையில் வருவாய் வட்டாட்சியர் வெங்கடசேகர் வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களிடம் முறையாக விசாரணை செய்து விரைவில் மேற்படி ஒன்பது நபர்களுக்கும் பட்டா கிடைப்பதற்கு ஆவண செய்திருப்பதாக உறுதி அளித்தார்கள். மேற்படி நிகழ்வில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அழகு தமிழ் சங்கர் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஆ.சண்முகராஜா, மாவட்ட மருத்துவர் அணி துணை டாக்டர் மாரியப்பன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வழக்கறிஞர் ஆபத்துக்காத்தான், நகர அவைத் தலைவர் காளி, நகர துணைச் செயலாளர் சிவராஜா, மாவட்ட பிரதிநிதி பாஞ்ச் பீர்முகம்மது, பொ.மணிகண்டன், நகர தொழிலாளர் அணி அமைப்பாளர் உ.ரவீந்திரன்,கழக பேச்சாளர் செங்கைகுற்றாலிங்கம், முத்துமாரியப்பன், வார்டு கழக செயலாளர்கள் ஜிடிஎம்.கோவிந்தராஜ்,வேலுமணி, கோபால், பாகமுகவர்கள் விஜயபாரதன்,ஆ.சங்கர்கணேஷ்,திவான்,டைமண்ட்சலீம்,நகர்மன்ற உறுப்பினர்கள் இசக்கியம்மாள், முருகையா நகர இளைஞரணி அமைப்பாளர் காஜாமுகைதீன், துணை அமைப்பாளர் சுப்ரமணியன், விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கண்ணன், சுப்பிரமணியன், முருகேசன், ரகுமத்துல்லா, வெடிகரீம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

வரும் சட்டசபைத் தேர்தலில்

# திமுக கூட்டணியில் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியை மனிதநேய மக்கள் கட்சிக்கு ஒதுக்க வேண்டும்

## ம.ம.க. பொதுச் செயலாளர் அப்துல் சமது பேச்சு



**தென்காசி ஜன.12:**
மனிதநேய மக்கள் கட்சியின் பொதுச் செயலாளரும், மணப்பாறை சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவருமான அப்துல் சமது பங்கேற்ற பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி, கடையநல்லூர் நகர மனிதநேய மக்கள் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், கடையநல்லூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளாக உள்ள முக்கிய விசயங்கள் முன் வைக்கப்பட்டன. அதில், கடையநல்லூர் அரசு மருத்துவமனையை உடனடியாக தரம் உயர்த்தி, மேம்பட்ட மருத்துவ வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்பதும், நீண்ட காலமாக கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வராமல் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்பதையும் வலியுறுத்தி கோரிக்கை வைக்கப்பட்டது.

கேரளாவிற்கு கனரக கனிமவள லாரிகளின் மூலம் கடத்தி செல்லும் கனிம வளங்களை தடுத்து நிறுத்த கோரியும், கடையம் ஒன்றிய பகுதிகளில் லாரிகளுக்கு நேர கட்டுப்பாட்டை காவல் துறை அறிவித்தது அதன்படி காலை 7 மணி முதல் 11 மணி வரையிலும் மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலும் கனரக கனிமவள லாரிகள் இயங்க கூடாது என உத்தரவு பிறப்பித்தும் விதிமுறைகளை மீறி தொடர்ந்து கனிம வள லாரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன எனவே அந்த நேர கட்டுப்பாட்டை அமல்படுத்த மனிதநேய மக்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது

மேலும், வரவிருக்கும் 2026 சட்டசபைத் தேர்தலில், திமுக கூட்டணியில் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியை மனிதநேய மக்கள் கட்சிக்கு (மமக) ஒதுக்க வேண்டும் என்ற அரசியல் கோரிக்கையும் இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பின் போது மாவட்ட கழகத்தின் சார்பாக முன்வைக்கப்பட்டது.

பத்திரிகையாளர் சந்திப்பின்போது, மனிதநேய மக்கள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் மைதீன் சேட்கான், மமக மாவட்டச் செயலாளர் சலீம், தமுமுக மாவட்டச் செயலாளர் அப்துல் ரகுமான், மாவட்டப் பொருளாளர் முகம்மது பாசித், மமக மாவட்ட துணைச் செயலாளர் கோதர் மைதீன் தலைமைக் செயற்குழு உறுப்பினர் பசீர் ஒலி, அச்சன்புதூர் பீர்மைதீன், செய்யது மசூது, மஜீத், சமூக நீதி மாணவர் அணி மாவட்டச் செயலாளர் மஜீத் ஷா, சுற்றுச்சூழல் அணி மாவட்டப் பொருளாளர் சேகனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், கடையநல்லூர் மமக நகரச் செயலாளர் முகமது அலி, தமுமுக நகரச் செயலாளர் ரஹ்மத்துல்லாஹ், அச்சன்புதூர் கிளைத் தலைவர் அகமது அலி ரஜாய், வடகரை கிளை தலைவர் மைதீன், ஒன்றிய தலைவர் மகுதண்ணன், கடையநல்லூர் நகர துணைச் செயலாளர் ஹாஜா மைதீன் உள்ளிட்ட தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு நிர்வாகிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



**தென்காசி மாவட்டம் ஆலங்குளம் மத்திய ஒன்றியம் சோலைசேரி ஊராட்சியில் பொங்கல் திருநாளை முன்னிட்டு அம்பேத்கார் இளைஞர் அணி சார்பில் நடைபெறும் பொங்கல் விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளது ந போட்டிகளுக்கு தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் நிதி உதவி வழங்கினார் நிகழ்வில் மாவட்ட திமுக மருத்துவர் அணி அமைப்பாளர் அன்பரசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் இஞ்சி இஸ்மாயில் நகர் மன்ற உறுப்பினர் முருகன் -கலந்து கொண்டனர்**

# கே.வி.எஸ். 1978 எஸ்.எஸ்.எல்.சி. கேவிஎஸ் ப்ரண்ட்ஸ் அசோசியேசன் சார்பில் முருகன், ஐயப்ப பக்தர்களுக்கு நலத்திட்ட உதவி



**தென்காசி ஜன.12**
தென்காசி வழியாக சபரி மலை ஐயப்பன் கோவிலுக்கு தமிழக்கத்தின் பல் வேறு பகுதிகளிலிருந்து லட்சக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் கோவிலுக்கு சென்று வருகிறார்கள்.

அதேபோன்று தென்மாவட்டங்களில் இருந்து திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு முருகன் பக்தர்கள் காவடி எடுத்தும், நடைபயணமாகவும் சாலை மார்க்கமாக அணி, அணியாக சென்று இந்த மாதம் முருகனை தரிசித்து வருகிறார்கள். முருகன் மற்றும் ஐய்யப்ப பக்தர்களை சிறப்பு செய்யும் வகையில் கேவிஎஸ் 1978 எஸ்.எஸ்.எல்.சி. கேவிஎஸ் ப்ரண்ட்ஸ் அசோசியேசன் சார்பில் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தலைவர் ஜாம்பவான் (எ) ரமேஷ், செயலர் அலெக்ஸாண்டர், பொருளாளர் காளிராஜன், துணைத்தலைவர்கள் குணாளன், பாண்டியராஜன், இணைச் செயலாளர்கள் மதிபிரகாசம், முத்துகாமாட்சி மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் மரு. முருகேசன், பாஸ்கரன், மரிய மிக்கேல் ஜேசுராஜ், செல்வராஜன், அருள்மொழி, வசுபதி, கந்தசாமி, பவளகண்ணன், சண்முகவேல், இன்பராஜன், நாராயணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் அசோசியேசன் சார்பில் தமிழகம் முழுவதும் கஷ்டப்படும் வயதானவர்கள், ஏழை மாணவர்கள், தூய்மைப்பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள்,அரசுப்பள்ளியில் பயின்று முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலருக்கும் நலத்திட்ட உதவிகள் செய்து வருகிறோம்.

இறைவன் ஆசியால் இந்தப்பணி மேலும் தொடரும் என கேவிஎஸ் 1978 எஸ்.எஸ்.எல்.சி. கேவிஎஸ் ப்ரண்ட்ஸ் அசோசியேசன் தலைவர் ஜாம்பவான் (எ) ரமேஷ் பத்திரிக்கையாளர் சந்திப்பில் தெரிவித்தார்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சென்னை கொளத்தூர் ஏரி பூங்கா சேவை சாலை பணிகள், நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் மற்றும் சாலை அகலப்படுத்துதல் பணிகள் அமைச்சர்கள் எ.வ.வேலு,பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு



சென்னை,ஜன.12
பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்.எ.வ.வேலு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்பி.கேசேகர்பாபு ஆகியோர் கொளத்தூர்-பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையிலிருந்து வரும் வாகனங்கள் உள்வட்ட சாலையை அடைவதற்கும், கொளத்தூர் ஏரி பூங்கா செல்வதற்கும் 600 மீட்டர் நீளம் மற்றும் 7.50 மீட்டர் அகலம் கொண்ட சேவை சாலையின் இருபுறமும் 2.00 மீட்டர் அகலத்திற்கு நடைபாதையும், நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, சாலைப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர். அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறை சார்பில், கொளத்தூர், செந்தில் நகரில் ரூ.15.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் மற்றும் ஜி.என்.டி சாலை, பாடி மேம்பாலம் அருகில் ரூ.155.35 கோடி மதிப்பீட்டில் சாலை மற்றும் மேம்பாலம் அகலப்படுத்துதல் முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கொளத்தூர் பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தையும் மற்றும் கொளத்தூர் ஜி.கே.எம். காலனியில் அமைந்துள்ள குளக்கரை பூங்காவையும் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எ.வ.வேலு அவர்கள் மற்றும் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சென்னை தீவுத்திடலில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக பேருந்து நிலையத்தின் பணிகளை ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வுகளின்போது மேயர்.ஆர்.பிரியா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர்கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர்.ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர்எச்.ஆர்.கௌஷிக், வடக்கு வட்டார துணை ஆணையர்.கட்டா ரவி தேஜா, நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் (பெருநகரம்) ஜவகர் முத்துராஜ், (கட்டுமானம் - பராமரிப்பு) சத்தியபிரகாஷ், கண்காணிப்புப் பொறியாளர்.சரவணசெல்வன், சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர்ராஜன்பாபு, எம்.டி.சி. இணை மேலாண் இயக்குநர் திரு.சுந்தரபாண்டியன், பொது மேலாளர் (இயக்கம்) .நெடுஞ்செழியன், மண்டலக் குழுத்தலைவர்சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்நாகராஜன் உடனிருந்தனர்.

# திருவொற்றியூரில் நடந்த திராவிட பொங்கல் விழாவில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள்:ஆ.ராசா எம்.பி. வழங்கினார்



**திருவொற்றியூர் ஜன.12**
சென்னை வட கிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 12வது வட்ட திமு கழக சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க நடைபெற்ற மாபெரும் திராவிட பொங்கல் விழாவில் வட்ட கழகத்தின் சார்பில் அவைத் தலைவர் பா. கண்ணபிரான், துணை செயலாளர்கள் வ.மோகன், எஸ்.பாக்கியமணி, தாரா பானு, பொருளாளர் மு. சண்முகம், பகுதி பிரதிநிதிகள் வேணுகோபால்,ஜெயசீலன், சோட்டுராஜ் குமார், பொன்ராஜ், கார்த்திகேஸ்வரன், மாவட்ட கழக பிரதிநிதிகள் ஜெயராமன், சைலஸ், பாஸ்கரன், முன்னாள் நகரமன்ற உறுப்பினர்கள் வேலு, மாலதி, மற்றும் பாரூக் ஆகியோர் முன்னிலை வகிக்க பகுதி கழக செயலாளர் தி. மு. தனியரசு, வட்ட கழக செயலாளர் க. வீ. சதீஷ்குமார் வரவேற்புரையாற்ற மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம் எல் ஏ தலைமையில் நடைபெற்றது.

விழாவில் கே.பி. சங்கர் எம் எல் ஏ கிழக்கு பகுதி அவைத் தலைவர் ஆசைத்தம்பி, மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள் தாசன், தொகுதி பார்வையாளர் தி.நகர் மோகன், முன்னிலையில் சென்னை மண்டல பொறுப்பாளர் கழக துணைப்பொது செயலாளர் ஆ. இராசா எம். பி. பங்கேற்று 1000 பேருக்கு எவர் சில்வர் பொங்கல் பானை, புத்தரசி, வெல்லம், தரமான புடவை, பேன்ட் ஷர்ட், நாட்காட்டி, கொண்ட அழகிய தொகுப்பைபையில் வழங்கினார்,

மேலும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்49- வது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக கழகத்தின் மூத்த முன்னோடிகள்69 பேர்களுக்கு ரூ. 5000 மற்றும் பொற்கிழி வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவினை தலைமை கழக வழக்கறிஞர் 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் கவிகணேசன் வீராசாமி ஏற்பாடு செய்திருந்தார்.

# கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் மின்னொளி கிரிக்கெட் போட்டி



**தென்காசி ஜன.12**
கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில், திராவிட பொங்கல் விழாவினை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் மின்னொளி கிரிக்கெட் போட்டி நடைபெற்றது

நிகழ்ச்சியில் கழக துணை பொதுச்செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா, தென்காசி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கலைகதிரவன், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியகுழு தலைவர் காவேரி சீனித்துரை , தெட்ஷணமாறநாடார் சங்க தலைவர் ஆர்.கே.காளிதாஸ், பாரத்ஸ்கேன்ஸ் நிறுவனர் டாக்டர்.இம்மானுவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டி ஏற்பாடுகளை கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சீனித்துரை செய்திருந்தார்

# தனியார் மருத்துவ கல்லூரியில் உயர்கல்வி படிப்பிற்கான சீட் வாங்கி தருவதாக கூறி ரூ.11.65 லட்சம் மோசடி: ஒருவர் கைது

**சென்னை ஜன12-**
சென்னை, பாலவாக்கம், கரீம் நகர் பகுதியில் வசித்து வரும் உமா, என்பவர் தனது மகள் கல்லூரியில் படித்துவிட்டு, போரூரில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரியில் என்ற மேற்பபடிப்பிற்காக விண்ணப்பித்திருந்த போது, அவரத குடும்ப நண்பர் மூலம் அறிமுகமான பீட்டர் அறிவரசன் என்பவர் உமாவிடம், தங்களது மகளுக்கு இதே படிப்புக்கான கல்லூரி சீட் வாங்கி தருவதாகவும், அதற்கு ரூ.10 இலட்சம் ஆகும் எனக் கூறியதன்பேரில், உமா 30.05.2025 அன்று 2 தவணைகளாக ரூ.10 இலட்சம் பணத்தை பீட்டர் இளவரசனிடம் கொடுத்ததாகவும், பின்னர் பீட்டர் இளவரசன் அனுமதி கிடைத்துவிடும் எனவும் கல்லூரி கட்டணம் கட்ட வேண்டும் எனவும் 1.65 இலட்சம் பணம் கேட்டதன்பேரில், உமா 01.08.2025 அன்று அவரது வங்கி கணக்கிற்கு ரூ.1.65 இலட்சம் அனுப்பியதாகவும், ஆனால் பீட்டர் இளவரசன் சொன்ன படி கல்லூரி சீட் வாங்கி தராமல் ஏமாற்றியதால், அவரிடம் மொத்தம் கொடுத்த ரூ.11.65 இலட்சம் பணத்தை திரும்ப கேட்டபோது தகாத வார்த்தைகள் பேசி பணத் தராமல் ஏமாற்றியதாகவும், உமா என்பவர் நீலாங்கரை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் மோசடி பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

நீலாங்கரை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில் புகார்தாரர் குறிப்பிட்டிருந்தது உண்மையென தெரியவந்ததின்பேரில், மேற்படி பண மோசடியில் ஈடுபட்ட எதிரி பீட்டர் அறிவரசன், என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி பீட்டர் அறிவரசன் என்பவர் பொறியியல் படித்து, தனியாக தொழில் தொடங்கி நஷ்டம் ஏற்பட்டுளளதும், இதனால் பீட்டர் இளவரசன் பல நபர்களை இது போல ஏமாற்றி பல இலட்சங்கள் மோசடி செய்துள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி பீட்டர் அறிவரசன் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

திருச்செந்தூரில்

# சாலை விதிகளை பின்பற்றிய இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு இன்ஸ்பெக்டர் கனகராஜன் சால்வை அணிவிப்பு



**திருச்செந்தூர், ஜன. 12**
திருச்செந்தூர் சாலை விதிகளை பின்பற்றிய இரு சக்கர வாகன ஓட்டிகளை இன்ஸ்பெக்டர் கனகராஜன் சால்வை அணிவித்து கவுரவித்தார்.

சிவகாசியைச் சேர்ந்த திருச்செந்தூர் பாதயாத்திரை பக்தர்கள் குழு சார்பில் இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இலவச தலைக்கவசம் வழங்கும் நிகழ்ச்சி திருச்செந்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முன்புள்ள நுழைவாயில் அருகே நடந்தது. இதில் திருக்கோயில் இன்ஸ்பெக்டர் கனகராஜன் சாலை விதிகளை பின்பற்றி தலைக்கவசம் அணிந்து வந்த இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு சால்வை அணிவித்து கவுரவித்தார். அதே போல அணியாமல் வந்தவர்களுக்கு பாதுகாப்பாக செல்வதற்கு தலைக்கவசம் அவசியம் என வலியுறுத்தி தலைக்கவசம் வழங்கினார். மேலும் பாதயாத்திரை பக்தர்கள் நடந்து செல்வதால் வாகன ஓட்டிகள் வேகத்தை குறைத்து அவர்களுக்கு இடையூறு இன்றி செல்லுமாறு அறிவுறுத்தினார். நிகழ்ச்சியின் போது பாதயாத்திரை பக்தர்கள் குழு நிர்வாகிகள், திருச்செந்தூர் கணேஷ்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்

**கனம் சார் ஆட்சியர் நீதிமன்றம்
தென்காசி
RDOTKS/
பி.ப.வ.எண்.68/2025-b2
I.சேக்ரம்ஜான்
க/பெ. முகம்மது இஷாக்,
3C/1, இந்திரா நகர்,
நன்னகரம், மேலகரம்,
தென்காசி - 627802
.... மனுதார்
அறிவிப்பு**

**ஷை மனுதார் I.சேக்ரம்ஜான் என்பவர் கடந்த 05.01.1989ம் தேதியன்று மேற்கண்ட முகவரியில் வைத்து பிறந்ததை தனது பெற்றோர் அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறிவிட்டனர். மேற்படி பிறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினத்திற்குள் தென்காசி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
மனுதார்
I.சேக்ரம்ஜான்**

**கனம் சார் ஆட்சியர் நீதிமன்றம்
தென்காசி
RDOTKS/
இ.ப.வ.எண்.152/2025-b2 .
நாள் : 14.11.2025
M.முகம்மது காசிம்,
த/பெ. முகம்மது ஷரிஃப்
1/169, ஆர்.கே.எம். தெரு,
சம்பன்குளம் - 627412
அயன்தர்மபுரமடம்
ஆழ்வார்குறிச்சி
தென்காசி தாலுகா & மாவட்டம்
.... மனுதார்
அறிவிப்பு**

**ஷை மனுதார் M.முகம்மது காசிம், என்பவர் தனது தாயார் நபிஷாள் பீவி கடந்த 17.02.2017ம் தேதியன்று மேற்கண்ட முகவரியில் வைத்து இறந்ததை பதிவு செய்ய தவறிவிட்டார். மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினத்திற்குள் தென்காசி கனம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
மனுதார்
M.முகம்மது காசிம்,**

